# THIRUMARAI AASAAN


**S. Rajanayagam**

**Editor**

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

PH. : 04257 - 230030  Cell : 98427 - 30382, 99655 - 30385


**Pleading for the restoration of pure New Testament Christianity**

**Vol. 32  February - 2019  Issue - 2**


நிறுவன ஆசிரியர் உரை

## இரட்சிப்பில் தேவனுடைய பங்கும், மனிதனுடைய பங்கும்

**கி**றிஸ்துவ மார்க்கத்தில் எந்த ஒரு தலைப்பை எடுத்துக் கொண்டாலும் ஒன்றுக்கு மேற்பட்ட கருத்துக்கள் இருக்கும் என்பது வேதனையான உண்மை. இரட்சிப்பு என்ற பொருளும் அதற்கு விதி விலக்கல்ல. இந்த முரண் பாடுகளுக்கு வேதாகம் பொறுப்பல்ல. மனிதனுடைய சிறுமதியும், தான் ஏற்கனவே கொண்டிருக்கிற கருத்துக்குப் பொருந்தி வருகிற வசனங்களை மட்டும் தேடிப்பிடித்து வைத்துக் கொண்டு, அதே பொருளைக் கூறுகிற மற்ற வசனப் பகுதிகளைப் புறக்கணித்து ஒதுக்கி ஓரம் கட்டி விடுவதும் தான் காரணம்.

எந்த ஒரு கருத்தைப் பற்றியும் சரியான முடிவுக்கு வரவேண்டுமானால் அதைப்பற்றிச் சொல்லப்பட்ட எல்லா வசனங்களையும் படித்து அவைகள் எவ்வாறு ஒன்றுக் கொன்று சம்பந்தப்பட்டிருக்கிறது என்று ஆய்வு செய்து முடிவுக்கு வர வேண்டும். இல்லாவிட்டால் குருடர்கள் யானை பார்த்த கதைபோல கருத்து வேற்றுமைகள் இருந்து கொண்டு தான் இருக்கும். இரட்சிப்பு போன்ற முக்கியமான காரியங்கள் நம் நித்தியம் சம்பந்தப்பட்ட விஷயம். இதைக்குறித்து இரண்டு நினைவுகளால் குந்திக் குந்தி நடப்பது அபாயம். ஆகவே, அதைப்பற்றி வேத வசனங்களின் வெளிச்சத்தில் தெளிவு பெற முயற்சிப்போம்.

கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப் பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியையினால் உண்டானதல்ல (எபே. 2:8,9) என்கிற வசனத்தையும், தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார் என்கிற வசனத்தையும் ஆதாரமாகக் காட்டி இரட்சிப்பு தேவனுடைய சுத்த கிருபை அதில் மனிதன் ஒன்றும் செய்ய வேண்டியதில்லை என்றும் போதிக்கின்றனர்.

வேறு சிலர்... நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாச முள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் (மாற்கு 16:15,16) என்கிற வசனத்தையும் நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் (அப்.2:38) என்கிற வசனத்தையும் சுட்டிக்காட்டி இரட்சிப்பின் திட்டத்தில் மனிதனுக்கும் பங்கு உண்டு என்று வற்புறுத்துவர். இருசாரார் கூற்றிலும் உண்மை இல்லாமல் இல்லை. ஆனால், முழு உண்மை இல்லை. ஒருவர் இரட்சிப்புக்கு தேனுடைய கிருபை மட்டும் போதும் என்கிறார். மற்றவர் மனுஷருடைய கிரியை முக்கியம் என்கிறார்.வேதாகமத்தை ஆய்ந்து பார்க்கின், இரட்சிப்புக்கு தேவனுடைய கிருபையும் வேண்டும்; மனுஷனுடைய கிரியையும் வேண்டும் என்பது புலனாகும்.

கிறிஸ்து, இரட்சிப்புக்குப் பல வழிகள் உண்டு என்று போதிக்கவில்லை. என் உபதேசம் என்னுடையதாயிராமல் என்னை அனுப்பினவருடையதாயிருக்கிறது என்கிறார் (யோவான் 7 : 16). அந்த உபதேசத்தில் மாற்றம் ஏற்படக்கூடாது என்று கருதி, அதைத் தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியான வரிடத்தில் ஒப்புவித்து, அவைகளின்படி அப்போஸ்தலர்களை வழிநடத்தவும், மறந்துபோனதை நினைவுக்குக் கொண்டுவரவும் ஏற்பாடு செய்தார் (யோவான் 14 : 26 ; 16 : 13) அப்படிப்பட்ட தெளிவான முறையில் உபதேசத்தைக் கற்றுக்கொண்ட அப்போஸ்தலர்கள் இரட்சிப்பைக் குறித்து

எபேசு பட்டணத்தில் ஒரு மாதிரியும், கொரிந்து பட்டணத்துக்குப் போய் அங்கு ஒருவிதமாகவும் போதிப்பார்களா? நிச்சயமாக இல்லை. மாறாக, இயேசு கிறிஸ்து தான் ஒரே வழி, அவருடைய போதனையும் ஒரே போதனை தான்.

பல சமயங்களில், நாம் மனிதனுடைய பங்கையே அதிகமாக வலியுறுத்திக் கொண்டு இரட்சிப்பில் தேவ கிருபையின் இன்றியமையாமையை மறந்து விடுகிறோம். கிருபை என்பது என்ன? கிருபை என்பது நாம் சம்பாதிக்காத ஒரு சொத்து. அதைப் பெற்றுக்கொள்வதற்கு நமக்குத் தகுதி கிடையாது. அதற்கு ஈடாக நாம் ஒன்றும் தர வேண்டிய தில்லை. அதைப் பெற்றுக்கொள்ள ஒரு தகுதியும் நிர்ணயிக்கப்படவும் இல்லை. ஆகையால், இரட்சிக்கப் படுவதற்கு தேவ கிருபையும், கிறிஸ்துவினுடைய தியாகமும் அவசியம், அது இலவசம். ஆனால், அதைப் பெற்றுக்கொள்ள விசுவாசம் தேவை. **விசுவாசத்தின் மூலம்** என்ற சொல்லாச்சிக்கு அதுவே பொருள். அப்படியில்லை என்று சொன்னால் கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள் என்று நேரடியாகச் சொல்லியிருக்கலாமே, **விசுவாசத்தைக் கொண்டு** என்ற சொற்றொடர் ஏன்?

ஆகவே, இயேசு இரட்சிப்பின் திட்டத்தில் விசுவாசத்தின் வெளிப்பாடாகிய மனிதனுடைய பங்கு என்ன என்பதைப் பற்றிச் சொல்லியிருக்கும் நிபந்தனைகளை நாம் குறைவாக மதிப்பிடவோ, உதாசீனம் செய்யவோ கூடாது. ஆனால், ஒன்றை நாம் எல்லாருமே ஒத்துக்கொள்ள வேண்டும். இயேசுவின் இரத்தமே இரட்சிப்பின் மையம். இரட்சிப்பின் திட்டத்தில் தேவ கிருபை சிலுவையின் வழியாக மனிதனிடத்திற்கு இறங்கி வருகிறது, மனிதனுடைய விசுவாசம் அதே சிலுவை வழியாக தேவனிடத்துக்கு ஏறிப்போகிறது.

**கிருபையின் மூலமாக நீங்கள் இரட்சிக்கப்பட்டீர்கள்; இது கிரியையினால் உண்டானது அல்ல** (எபே.2:8,9) என்கிற வசனப்பகுதி நமக்குப் போதிக்கிற உண்மை என்ன? நம்முடைய இரட்சிப்புக்கு மனிதனுடைய கிரியைகளை விட தேவ கிருபையே பிரதானமானது. அந்த வல்லமை இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தில் இருக்கிறது. நமக்குப் பாவ மன்னிப்பு உண்டாவதற்கு இயேசு கிறிஸ்துவின் இரத்தமே முழுமுதற் காரணமாகிறது. நம்முடைய ஆவிக்குரிய நோயைத் தீர்க்க ஒரே ஒரு மருந்து இயேசுவின் இரத்தம் மட்டுமே. ஆகவே, இரட்சிப்பில் தேவனுடைய பங்கே பிரதானமானது. **கிருபையைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்,** இது தேவனுடைய ஈவு.

இப்பொழுது இரட்சிப்பில் மனிதனுடைய பங்கு என்ன என்பதைப் பார்ப்போம். நாம் சிந்தித்த (எபே. 2:8,9) ஒரு பகுதி நாம் தேவனுடைய கிருபையால் இரட்சிக்கப்படுகிறோம் என்று மட்டும் சொல்லாமல் மனிதனுடைய விசுவாசத்தைக் கொண்டும் இரட்சிக்கப்பட்டீர்கள் என்று கூறுகிறது. வேதாகமம் இரட்சிப்பு தேவனுடைய ஈவு என்கிறது. அதற்கு இரட்சிப்பு நிபந்தனை அற்றது என்று பொருளா? இல்லை. நீங்கள் ஆம், இரட்சிப்பு நிபந்தனையற்றது என்று நான் நம்புகிறேன் என்று சொல்வீர்களானால் **விசுவாசத்தைக் கொண்டு** என்ற சொற்றாடருக்கு அங்கு வேலையில்லையே! கிருபையைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது தேவனுடைய ஈவு என்பதெல்லாம் எவ்வளவு அர்த்தமுள்ளவைகளோ, அதே அளவு '**விசுவாசத்தைக் கொண்டு**' என்பதும் அர்த்தமுள்ளதே! தேவன் தம்முடைய இரக்கத்தினால் இரட்சிப்பை மனிதனுக்கு ஈந்ததற்காக ஸ்தோத்திரம்.

**விசுவாசத்தைக் கொண்டு** என்ற சொற்றொடரில் பொதிந்து கிடக்கிற கருத்து என்ன? இரட்சிப்பில் தேவனுடைய பங்கும், மனிதனுடைய பங்கும் சிலுவையை மையமாகக் கொண்டிருக்கிறது. சிலுவையல்லாமல் மனிதனுடைய பங்கு அர்த்தமற்றது. தேவனுடைய பங்கு கூட சிலுவையோடு சம்பந்தப்பட்டிருக்கிறது என்றாலும் கூட விசுவாசம், ஒப்புக்கொடுத்தல் என்பவைகளின் பொருளை சரியாக விளங்கிக்கொள்ளாமற் போனால், இழந்த பாவிக்கு அது பொருளற்றதே. ஒருவன் தன்னுடைய விசுவாசத்தைக் கீழ்ப்படிதலில் வெளிப்படுத்த வேண்டும்.

முதலாவது நாம் இரட்சிப்பின் வேர் எது என்று கண்டுபிடித்து பின்னர் இரட்சிப்பின் கனியைத் தேட வேண்டும். இயேசு கிறிஸ்துவின் இரத்தமே இரட்சிப்புக்கு இன்றியமையாதது என்பது சரி. ஆனால், நம்மை நீதிமானாக்குவது நமது விசுவாசமே. விசுவாசம் என்பது செயலையும் சேர்த்துத்தான் குறிக்கிறது; செயல் இல்லாத விசுவாசத்தை வேதாகமம் **ஆவியில்லாத சரீரம்** என்று வாக்களிக்கிறது (யாக். 2:26) ரோமர் 4:3ல் **ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான் அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது** என்கிறது. அவனுடைய விசுவாசம் உறுதியுள்ளதாகவும், உயிருள்ளதாகவும் தேவனுடைய எந்தக் கட்டளைக்கும் கீழ்ப்படியத் தயாராகவும் இருந்தது. அவனுடைய விசுவாசம் செயல்படாததாக இருந்திருந்தால் அது தேவனுக்குப் பிரியமாய் இருந்திருக்காது.

விசுவாசத்தை கொண்டு என்ற சொற்றொடரில் மனந்திரும்புதலும் அடக்கம். அன்றியும் மனந்திரும்புதலும் பாவ மன்னிப்பும் எருசலேம் தொடங்கி சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவேண்டியது என்று இயேசு சொன்னார் [லூக்கா. 24:47]. மனந்திரும்புதல் என்பது ஒரு மனிதன் சிலுவையண்டை வந்து நின்று தேவனுடைய அன்பையும், இரக்கத்தையும் தேவ நீதியையும் நோக்கிப் பார்த்து கிறிஸ்து இயேசு அவனுக்காக மரித்தார் என்று உணர்வதாகும்.

விசுவாசத்தைக் கொண்டு என்ற சொற்றொடரில் அறிக்கையிடுதலும் அடக்கம். கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினால் அறிக்கையிட்டு தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப் படுவாய். நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும் இரட்சிப் புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும் [ரோமர். 10:9-10].

பின்னர் ஞானஸ்நானம் : இப்பொழுதும் நம் கண் முன்னே சிலுவையை நிறுத்தி நோக்குகிறோம். நாம் கிருபையினாலே இரட்சிக்கப்பட்டோம். அதே வேளையில் விசுவாசத்தைக் கொண்டு என்பதையும் மறந்துவிடக்கூடாது. நம்முடைய கர்த்தரை விசுவாசித்து மனந்திரும்பி, அறிக்கை செய்யவேண்டும் என்பதோடு நிறுத்திக் கொள்ளாமல், நம்முடைய மனதில் மறைந்து கிடக்கும் விசுவாசத்தை சிறந்த முறையில் வெளிப்படுத்தும் ஞானஸ்நானத்தையும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்கிறார். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் [மாற்கு 16 : 16].

ஞானஸ்நானத்தின் சிறப்பு நிலையை அறியாமல் மார்க்க உலகம் குழம்பி, பிரிந்து கிடப்பது எத்துணை வேதனை! சிலுவை இல்லாமல் அதற்கு ஒரு சிறப்பும் இல்லை; அதேபோல் விசுவாசமும் மனந்திரும்புதலும் இல்லாமல் சிலுவைக்கு ஒரு சிறப்பும் இல்லை. ஞானஸ்நானத்தில் நாம் அடக்கம் செய்யப்படும்போது, நாம் வெளிப்படையாகவும், அடையாளமாகவும் பாவமன்னிப்புக்கென்று அவருக்குள் மரிக்கிறோம் என்று கிறிஸ்து சொல்லியிருக்கிறார். ஞானஸ்நானம் பாவமன்னிப்புக்கென்று கொடுக்கப்படுகிறது [அப். 2 : 38]. ஏனெனில், இந்த விசுவாச அறிக்கை மூலமாக அருடைய மரணத்தில் இணைக்கப்பட்டிருக்கிறோம்.

ஞானஸ்நானம் என்னும் ஒரு செயலின் மூலம் கர்த்தரோடு அவருடைய மரணத்தில் இணைக்கப்படுவது எத்துணை மகிழச்சியான காரியம்! சுவிசேஷத்துக்குக் கீழ்ப் படிந்து ஆவியினாலும் ஜலத்தினாலும் பிறக்கிறோம். கீழ்ப் படிதலின் மூலம் நம்முடைய பெருமையைப் பறை சாற்றவில்லை. மாறாக, நாம் கர்த்தரை நேசித்துக் கனப்படுத்துகிறோம்.

மாற்கு 16:15ல் விசுவாசமும் ஞானஸ்நானமும், சொல்லப் படாததற்கு முன்பு, பூலோகம் எங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் என்று கூறப்பட்டிருக்கிறது என்பதைக் கவனியுங்கள். சுவிசேஷம் என்பது கிறிஸ்துவினுடைய மரணம், அடக்கம் பண்ணப் படுதல், உயிர்த்தெழுதல். ஆக, நம்முடைய ஆத்தும ஆதாயப் பணியை சிலுவையிலிருந்து தொடங்க வேண்டும். தேவனுடைய கிருபையையும் அவருடைய குமாரனின் மரணத்தையும் பிரசங்கிக்க வேண்டும். அப்போஸ்தலர்கள் எல்லா சமயங்களிலும் கிறிஸ்துவையும் அவருடைய சிலுவையையுமே பிரசங்கித்தார்கள். அப்போஸ்தலன் பேதுரு பெந்தெகொஸ்தே நாளில் நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும், கிறிஸ்துவுமாக்கினார் என்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவீர்கள் என்று கூறியதைக் கேட்டவர்கள், சகோதரரே நாங்கள் என்ன செய்ய வேண்டும், என்று இருதயத்தில் குத்தப்பட்டுக் கேட்டனர் [அப். 2 : 36,37].

ஆகவே, இரட்சிப்பின் திட்டத்தில் தேவனுடைய பங்கும், மனிதனுடைய பங்கும் இருக்கிறது. ஒன்றை வலியுறுத்தி மற்றொன்றை புறக்கணிப்பது தேவனுடைய கட்டளைகளை மாமிசமும் மனசும் விரும்புகிற வகையில் பின்பற்றுவதும், போதிப்பதும், தேவ சித்தத்தைப் புறக்கணித்து விட்டு சுய இஷ்டத்தை நிறைவேற்றுவதுமாகும். கடைசி காலத்தில் நியாயம் தீர்க்கிறது ஒன்று இருக்கிறது, அது கிறிஸ்து சொன்ன வசனமே! [யோவான் 12:48] ★

நமது **திருமறை ஆசான்** மாத இதழின் நிறுவன ஆசிரியரும், எனது தகப்பனாருமாகிய பெருமதிப்பிற்குரிய சகோ. **E.Z. செல்வநாயகம்** ஐயா அவர்கள் மறுமைக்குள் பிரவேசித்து **9.2.2019** உடன் **26** ஆண்டுகள் நிறைவடைவதால், அவர் நினைவாக இக்கட்டுரை வெளியிடப்பட்டுள்ளது.

# ஆவியின் கனிகள்

Bro.J.C.சோட்

மாம்சத்தின் சில கிரியைகளைப் பற்றி பவுல் பட்டியி லிட்டுக்காட்டிய பின்னர், அதற்கு எதிரான ஆவியின் கனிகளைப் பற்றி இப்போது பேசுகிறார். ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்; இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை. கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள். நாம் ஆவியினாலே பிழைத்திருந்தால், ஆவிக்கேற்றபடி நடக்கவும் கடவோம். வீண் புகழ்ச்சியை விரும்பாமலும், ஒருவரையொருவர் கோபமூட்டாமலும், ஒருவர் மேல் ஒருவர் பொறாமை கொள்ளாமலும் இருக்கக் கடவோம் (கலா 5:22-26) எபேசு பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கு பவுல் கூறினார்: முற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள், இப்பொழுதோ கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள்; வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்து கொள்ளுங்கள். ஆவியின் கனி, சகல நற்குணத்திலும் நீதியிலும் உண்மையிலும் விளங்கும். கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று நீங்கள் சோதித்துப் பாருங்கள் (எபே. 5:8-10).

இப்போது, ஆவியை அடைந்திருப்பது என்றால் என்ன பொருள்? கர்த்தருக்குக் கீழ்ப்படியும்போது, நாம் பரிசுத்த ஆவியானவரின் வரத்தைப் பெறுவதாகப் பேதுரு கூறினார் (அப்.2:38). அப்படியானால், பரிசுத்த ஆவியின் வரத்தை நாம் பெற்றால், நாம் பரிசுத்த ஆவியைப் பெறுகிறோம் (அப்.5:32). அப்போஸ்தலர்கள் கைகளை வைக்கும்படியாய் தேர்ந் தெடுக்கப்பட்ட ஏழு சீடர்களும் ஆவியால் நிறைந்திருந்தனர் (அப்.6:3).

பவுல் நமக்குச் சொல்லுகிறார்: இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம். அவர் மூலமாய் நாம் இந்தக்

**கிருபையில் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை விசுவாசத்தினால் பெற்று நிலைகொண்டிருந்து, தேவ மகிமையை அடைவோமென்கிற நம்பிக்கையினாலே மேன்மை பாராட்டுகிறோம். அது மாத்திரமல்ல, உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையையும் உண்டாக்குகிறதென்று நாங்கள் அறிந்து, உபத்திரவங்களிலேயும் மேன்மை பாராட்டுகிறோம். மேலும், நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால், அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது** [ரோமர் 5:1-5]. **மீண்டுமாக, அவர் கூறினார்: தேவனுடைய ராஜ்ஜியம் புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும், சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது** [ரோமர் 14:17].

பவுல் தொடர்ந்து பேசுகையில் இவ்விதமாகச் சொல்லுகிறார்: ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட் பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின் படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பி இல்லை. கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத் தினின்று விடுதலையாக்கிற்றே. அதெப்படியெனில், மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம் செய்யக்கூடாததை தேவனே செய்யும்படிக்கு, தம்முடைய குமாரனைப் பாவ மாம்சத்தின் சாயலாகவும், பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார். மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்படிக்கே அப்படிச் செய்தார். அன்றியும் மாம்சத்தின்படி நடக்கிறவர்கள் மாம்சத்துக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள்; ஆவியின்படி நடக்கிறவர்கள் ஆவிக் குரியவைகளைச் சிந்திக்கிறார்கள். மாம்சசிந்தை மரணம்; ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம். எப்படி யென்றால் மாம்சசிந்தை தேவனுக்கு விரோதமான பகை; அது தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப் படியாமலும், கீழ்ப்படியக்கூடாமலும் இருக்கிறது. மாம்சத்து குட்பட்டவர்கள் தேவனுக்குப் பிரியமாயிருக்கமாட்டார்கள். தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர் களாயிருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல [ரோமர் 8:1-8].

கிறிஸ்தவனில் ஆவியானவர் எப்படி கிரியை செய்கிறார் என்பதைப் பவுல் விளக்கிச் சொல்லுகிறார்: **அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியது இன்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர் தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார். ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிறபடியால், இருதயங்களை ஆராய்ந்து பார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார்** (ரோமர் 8:26,27).

தீத்துவுக்கு பவுல் எழுகிறார்: ஏனெனில், முற் காலத்திலே நாமும் புத்தியீனரும், கீழ்ப்படியாதவர்களும், வழி தப்பி நடக்கிறவர்களும், பலவித இச்சைகளுக்கும், இன்பங் களுக்கும் அடிமைப்பட்டவர்களும், துர்க்குணத்தோடும் பொறாமையோடும் ஜீவனம் பண்ணுகிறவர்களும், பகைக்கப் படத்தக்கவர்களும், ஒருவரையெருவர் பகைக்கிறவர் களுமாயிருந்தோம். நம்முடைய இரட்சகராகிய தேவனுடை தயையும் மனுஷர்மேலுள்ள அன்பும் பிரசன்னமானபோது, நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக் கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார். தமது கிருபையினாலே நாம் நீதிமான் களாக்கப்பட்டு, நித்திய ஜீவன் உண்டாகும் என்கிற நம்பிக்கையின்படி சுதந்தரராகத்தக்கதாக, அவர் நமது இரட்சகராகிய இயேசு கிறிஸ்து மூலமாய், அந்தப் பரிசுத்த ஆவியை நம்மேல் சம்பூர்ணமாய்ப் பொழிந்தருளினார் (தீத்து:3:3–7).

மீண்டுமாக, ஆவியுடன் இருத்தல் என்றால் என்ன? நாம் மேலே படித்த எல்லா வேதவசனங்களிலும், தேவனுக்குக் கீழ்ப்படிந்தவர்கள் அனைவரும் பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெற்றுக்கொள்ளுகின்றனர். இது அற்புதங்களைச் செய்ய முடியாத அளவிலான பரிசுத்த ஆவி என்றாலும், தேவனும் கிறிஸ்துவும் கிறிஸ்தவனில் வாழ்வதைப் போல இன்னும் பரிசுத்த ஆவியான வரும் அவனில் வாழ்கிறார் (I கொரி. 8:6). மாம்சமான சரீரமானது பரிசுத்த ஆவியின் ஆலயமாக இருக்கிறது என்று பவுல் கூறினார் (I கொரி. 3:16,17;6:19, 20).

நாம் ஆவியை உடையவராக இருந்து, ஆவியான வரால் கொடுக்கப்பட்ட வார்த்தைகளின் படி நடந்தால், ஆவியின் கனிகளைக் கொடுக்கிறோம். இந்தக் கனிகளைப் பற்றி பவுல் குறிப்பிடுகிறார். அவையாவன, **அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்.** இவற்றின் பொருளை நாம் அறிவோம் என்பதால், இவற்றை விளக்கத்தேவையில்லை. இந்நற் பண்புகள் கூடாது என்று எந்தச் சட்டமும் தடை செய்யாது. இந்தக் கனிகளை உண்டாக்க ஒரு அற்புதமோ அல்லது பரிசுத்த ஆவியானவரின் விசேஷித்த வழி நடத்துதலே தேவையில்லை. ஒருவன் தேவனுக்குக் கீழ்ப்படிந்து, ஆவியின் வசனத்துக்கு ஏற்றவாறு தொடர்ந்து நடக்கும்போது இந்தக் கனி உண்டாகிறது.

கிறிஸ்தவனைப் பற்றியும், அவனுடைய வாழ்வில் ஆவியானவரின் பங்கைப் பற்றியும், தேவனுடைய வார்த்தை நிறையச் சொல்லுகிறது என்றாலும் வருந்தத்தக்க காரியம் என்னவென்றால், அற்புதங்கள் தொடர்பாக மாத்திரமே பலர் ஆவியானவரைக் காண்கின்றனர். கிறிஸ்துவில் விசுவாச முள்ள வேறு பலர், ஆவியானவரைப் பற்றிப் பேசப்படும் எந்தக் காரியத்தையும் தயவு தாட்சண்யமின்றி ஒதுக்கிவிடு கின்றனர். ஏனென்றால், கிறிஸ்தவர்களின் வாழ்விலே இன்று பரிசுத்த ஆவியானவர் அற்புதமான காரியங்களைச் செய்கிறார் என்று அவர்கள் விசுவாசிப்பதாக அல்லது உதேசிப்பதாக பிறர் குற்றஞ்சாட்டி விடுவார்களோ என்ற அச்சமே காரணம். ஆகவே, நாம் இவ்விரு கருத்துக் களையும் ஏற்றுக்கொள்ளத் தேவையில்லை. மாறாக, அற்புதங்கள் நடைபெற்றுக்கொண்டிருந்த அப்போஸ் தலர்களின் நாட்களில், ஆவியானவரின் பணி என்ன என்றும், அற்புதங்கள் நின்று போன காலகட்டத்தில், அது நமது காலம் வரை கிறிஸ்தவர்களோடு பரிசுத்த ஆவியானவரின் பணி என்ன என்றும் நிதானித்துப்பார்க்க வேண்டும். பரிசுத்த ஆவியானவர் இன்று செய்யாத காரியங்களை அவர் செய்வதாகவும் நாங்கள் கற்பிக்க விரும்பவில்லை. அல்லது பரிசுத்த ஆவியானவரையும் கிறிஸ்தவர்களின் வாழ்வில் பரிசுத்த ஆவியானவரின் இன்றைய பங்கையும் ஒதுக்கித் தள்ளவும் நாங்கள் விரும்பவில்லை. ★

பெண்கள் பகுதி

# பூமியில் பாவத்தின் ஆரம்பம்

Sis. ரேச்சல் இராஜநாயகம்

கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே! இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஸ்தோத்திரங்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பாவம், தேவனையும், மனிதனையும் பிரிக்கிறது. பரிசுத்தத்திற்கு நேர் எதிரி பாவம். தேவன் இந்த பூமியை படைத்து ஆதி தாய், தகப்பனாகிய ஆதாம், ஏவாளைப் படைத்து அவர்கள் செய்யக்கூடாது என்று ஒரு கட்டளையையும் கொடுத்து ஏதேன் தோட்டத்தில் அவர்களை வாழ வைத்தார்.

வேதாகமத்தின் முதல் புத்தகம் என்றழைக்கப்படும் ஆதியாகமம் வானம், பூமி, தண்ணீர், பயிர், பூண்டுகள், மிருகங்கள், பறவைகள், மீன், மனிதன், திருமணம், பாஷைகள் என்று எல்லாவற்றிற்கும் முதலாயிருக்கிறது. மேலும், பாவத்தின் ஆரம்பத்தையும் இப்புத்தகம் நமக்கு வெளிப்படுத்துகிறது. ஆதி.3-ம் அதிகாரத்தில் பாவம் உலகிற்குள் வந்ததைப்பற்றி நாம் வாசிக்க முடியும். பிசாசு எப்படிப்பட்டவன் எப்படி ஏவாளை வஞ்சித்தான் என்பதை இக்கட்டுரையில் காண்போம்.

**சாத்தானின் கொடூரமான ஏமாற்றும் தந்திரோயங்கள்**

(ஆதி. 3:11,13; கொரி.11;2,3) (*I*பேதுரு 5:8). பிசாசின் தாக்குதல்களை மேற்சொன்ன வசனங்கள் விளக்குகின்றன. முதலாவது, ஏவாளை ஏமாற்ற அவன் தெரிந்துகொண்ட நேரத்தை நாம் கவனிக்க வேண்டும். நேரம் கண்டு அணுகியிருக்கிறான் அல்லது நேரத்தை பயன்படுத்திக் கொண்டான். கூட்டாளியாகிய அவள் கணவன் அவள் கூட இல்லாமல் ஏவாள் தனியேயிருந்தபோது பிசாசு அவளிடம் வந்தான். இதே விதமாக, இயேசு கிறிஸ்து தனியே வனாந்திரத்தில் இருந்த போது தான் பிசாசு அவரிடம் வந்தான் (மத்.4:1).

அடுத்து, பிசாசு மறைமுகமாகக் கேட்கும் கேள்வியை நாம் இங்கே கவனித்தாக வேண்டும். .....தேவன் சொன்னது உண்டோ? நன்றாகக் கவனியுங்கள் தேவன் இல்லை என்று அவன் சொல்லவே இல்லை. மாறாக, ஏவாளின்

இருதயத்தில் தேவன் என்றால், அவரின் சொல் அல்லது அவருடைய வார்த்தை என்னும் உண்மையில் ஒரு சந்தேகத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருந்தது. ஆம், அவன் முதல் வீச்சே தெய்வீக வார்த்தையைச் சந்தேகிக்குமளவுக்கு இருந்தது. இன்றளவும் தேவனுடைய வார்த்தையை கேள்வி கேட்குமளவுக்குத் தான் அவன் வேலைசெய்து கொண்டிருக்கிறான். அவன் தன் வேலையை முடித்துக் கொள்ள தேவ வார்த்தையையே தனக்கு சாதகமாக எடுத்து கொண்டு அன்றும், இன்றும் வேலை செய்கிறான். அவனுக்கென்று ஒரு அறிவும் கிடையாது. தேவனுடைய வார்த்தையின் மீது ஒருவர் பலமான விசுவாசம் கொண்டிருந்தால், பாவம் செய்ய முடியாது என்பதை அவன் நன்கு அறிந்திருந்தான். ஆம், பேதுருவைச் சந்தேகமடையச் செய்ததினால் பேதுரு கடலில் முழுகப் பார்த்தான். தேவனின் உண்மையை பொய் என்று சொல்வதே பிசாசின் வேலையாயிருக்கிறது. இன்றளவும் தேவ ஆவியினால் ஏவப்பட்டு எழுதப்பட்ட வசனங்களில் சந்தேகப்பட்டு உண்மையை மறுதலிக்க வைப்பதே பிசாசின் முயற்சியாயிருக்கிறது.

அடுத்து, என்ன இருந்தாலும் தேவன் இப்படி ஒரு நியாயாமற்ற கட்டளையைக் கொடுத்திருக்கக் கூடாது என்று சொல்லித் தாக்குகிறான். தேவன் இப்படியொரு தடை விதித்திருக்கக் கூடாது என்பது போல் அவன் பேச்சு இருக்கிறது. இன்றைக்கும் அவன் விசுவாசிகளிடையே ஐயோ! கிறிஸ்தவ வாழ்க்கை என்பது சுமையானது, முறியடிக்கப்பட வேண்டிய ஒன்று, தவறாக நடத்தக்கூடிய ஒன்று, எல்லாவற்றையும் இழக்கச் செய்துவிடும், தேவனுக்கு ஊழியம் செய்வதென்பது ஒரு கொத்தடிமைத்தனம் என்றெல்லாம் நம்மை நினைக்க வைத்து அவன் வழிக்கு நம்மை மாற்ற போராடிக் கொண்டிருக்கிறான். பிறகு, யூகம் செய்து உண்மையை அப்படியே அப்பட்டமாக மாற்றி பொய்களைப் பேசுகிறான். ஏவாளிடம் **நீங்கள் சாகவே சாவதில்லை** (ஆதி. 3:4) என்று துணிந்து பொய்யை வீசுகிறான். நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள்; உங்கள் பிதாவினுடைய இச்சைகளின்படி செய்ய மனதாயிருக்கிறீர்கள்; அவன் ஆதிமுதற்கொண்டு மனுஷ கொலைபாதகனாயிருக்கிறான்; சத்தியம் அவனிடத்திலில்லாதபடியால் அவன் சத்தியத்திலே நிலை நிற்கவில்லை. அவன் பொய்யனும் பொய்க்குப்

பிதாவுமாயிருக்கிறபடியால் அவன் பொய் பேசும் போது தன் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறான் (யோவான் 8:44). மேலும், அப்:5:3-ல் படிக்கும் போது, பேதுரு அவனை நோக்கி அனனியாவே, நிலத்தின் கிரயத்தில் ஒரு பங்கை வஞ்சித்து வைத்து, பரிசுத்த ஆவியினிடத்தில் பொய் சொல்லும்படி சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன? என்று கேட்கிறான். பொய் சொல்வது சாத்தானின் குணம் என்பதை நன்றாக அறிந்து கொண்டோம். இல்லை என்ற மூன்று எழுத்துக் கொண்ட வார்த்தை தான் இந்தப் பொய் பேச பிசாசுக்குத் தேவைப்பட்டது ( ஆதி.3:4).

இன்றைக்கும் பிசாசு யாக்: 2:24–ல் கிரியைகளினாலே நீதிமானாக்கப்படுகிறான் என்பதை, இல்லை விசுவாசமே போதும் என்றும், *I*பேதுரு 3:21ல் கூறப்பட்டுள்ள இரட்சிப்புக்கு ஞானஸ்நானம் அவசியம் என்பதை இல்லை என்றும் சொல்லக் கூடியவர்களை ஏவி விட்டுக் கொண்டு தான் இருக்கிறான். மேலும், தேவனின் அடிப்படையான குணாதிசயத்தை பிசாசு அறிந்தே வைத்திருந்ததினால் தான், தேவன் அறிவார் ( ஆதி.3:5) என்றும் சொல்லுகிறான்.

பிரியமானவர்களே, பிசாசு ஆதியில் இருந்தே முன்று வகையிலே ஒருவரை தாக்குகிறான். மாம்சத்தின் இச்சை, கண்களின் இச்சை, ஜீவனத்தின் பெருமை (Iயோவான்: 2:15–17). ஏவாளும் இந்த மூன்றுக்கும் ஒரே சமயத்தில் தன்னை பிசாசுக்கு விற்றுப்போட்டாள் . 1.) மாம்சத்தின் இச்சை - அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும். 2.) கண்களின் இச்சை- பார்வைக்கு இன்பமும். 3.) ஜீவனத்தின் பெருமை - புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சம்(ஆதி.3:6). இயேசுவை சோதிப்பதற்கும் பிசாசு இந்த மூன்று யுக்திகளைத்தான் மேற்கொண்டான் (மத்.4:1–11). எனவே தான் மனுஷருக்கு நேரிடுகிற சோதனையல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை (Iகொரி.10:13) என்று பவுலடியார் கொரிந்தியருக்கு கூறுகிறார். இயேசு கிறிஸ்து எல்லாவிதத்திலும் நம்மைப் போல சோதிக்கப்பட்டார் (எபி.4:15) என்று வாசிக்கிறோம்.

பிரியமானவர்களே! ஏதேன் தோட்டத்து சம்பவம் எப்பவுமே நமக்கு பயத்தையும், எச்சரிப்பையும் உண்டாக்குகிறது. அங்கே வீழ்ச்சிக்கு காரணம் மூன்று . வீழ்ச்சியிலிருந்து எழுவதற்கும் காரணம் மூன்றாக இருக்கிறது.

1.ஏவாள் பொய்யை கேட்டாள் – நாம் சத்தியத்தை கேட்க வேண்டும்
2. ஏவாள் பொய்யை விசுவாசித்தாள் – நாம் சத்தியத்தை விசுவாசிக்க வேண்டும்
3. பொய்க்கு கீழ்ப்படிந்தாள் – நாம் சத்தியத்திற்கு கீழ்ப்படிய வேண்டும்

அங்கே ஏவாள் பிசாசோடு ஒரு சம்பாஷணையை தொடர்ந்து செய்கிறாள். அப்பாலே போ சாத்தானே என்று அவள் சொல்லியிருந்திருக்கலாம். தேவன் ஒன்றை வேண்டாம் என்று சொல்லும் போது அதை ஆராய்வதும், காரணம் கண்டுபிடிப்பதும் நம்முடைய வேலை அல்ல. எந்த கேள்வியும் கேட்காமல் அதற்கு அப்படியே கீழ்ப்படிந்து ஏற்றுக் கொள்வதே நமக்குப் பாதுகாப்பானது. சகல விருட்சத்தின் கனி என்பதில் [ஆதி 2:16] சகல என்ற வார்த்தையை விட்டு [3:2–ல்] விடுகிறாள். தேவன் சொன்ன நன்மையான காரியங்களை பார்க்க மறுத்துவிட்டது போல் தெரிகிறது. மேலும், தொடவும் வேண்டாம்[3:3] என்ற வார்த்தையைக் கூட்டிக் கொள்கிறான். தேவன் தொடவேண்டாம் என்று சொல்லவேயில்லை. தேவன் ஒன்றை வேண்டாம் என்று ஒன்றை தடுக்கிறாரே என்ற காரியம் அவ்வளவு முக்கியமல்ல, துல்லியமாக கடைபிடிக்க வேண்டுமா? என்று நினைத்து விட்டாள். இவனாக சொல்லாத வார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுத்து பிசாசோடு உரையாடுகிறான்.

இதை வாசித்த அன்பு சகோதரிகளே! வேதத்தை அதாவது தேவனுடைய வார்த்தைகளை ஆராய்ந்து அனுதினமும் ஜாக்கிரதையாக படிப்போம். கூட்டவும் வேண்டாம், குறைக்கவும் வேண்டும். தேவனுடைய வார்த்தைக்கு அப்படியே கீழ்ப்படிவோமாக! ஆமென். ★

---

## கிறிஸ்தவனின் அவசியமான பண்புகள்

- எல்லா மனுஷருக்கு முன்பாக யோக்கியமானவைகளைச் செய்வது [ரோமர்12:17]
- எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருப்பது [ரோமர் 12:18]
- பழிவாங்குவதில் ஒருபோதும் ஈடுபடாமலிருப்பது [ரோமர் 12:19]
- தீமைக்குப் பதிலாக நன்மையையே செய்வது [ரோமர் 12:21]

வாலிபர் பகுதி

# ஆவியின் கிரியை vs சரீர இச்சை

Dr. ஏபில் நாயகம்

**வா**லிபர்களே! இயேசுவின் இன்ப நாமத்தில் வாழ்த்துக்கள். சர்வ வல்லமையுள்ள தேவனாலே கிருபையும் சமாதானமும் உண்டாவதாக. சரி, கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு பாவத்தின் பிடியிலிருந்து விலகி விடுதலையாக்கப் பட்டவர்களில் பலர், விடுதலையாக்கப்பட்ட உன்னத நிலைமையில் தொடர்ந்து நிலை கொண்டிராமல், பின்வாங்கி மீண்டும் பாவ வாழ்க்கைக்கு அடிமைப்பட்டுப் போகிறார்கள். இந்நிலைக்கு வாலிபர்களாகிய நாம் தான் அதிகம் பலிகடாவாகிக் கொண்டுள்ளோம்.

ஆவியில் நிலைத்திருப்பதா? அல்லது சரீர இச்சைகளுக்கு உட்படுவதா? என்பது வாலிபர்களாலே அடிக்கடி எதிர் கொள்ளப்படுகிற சவாலாக உள்ளது. அப்படிப்பட்ட சூழ்நிலைகளில் தேவனுடைய வார்த்தை களிலிருந்து தான் அதற்கான தெளிவைப் பெற்றுக்கொள்ள முடியும். வாலிபர்களாகிய நாம் நம்முடைய வழிகளை சுத்தம் செய்ய வேண்டுமானால், அவருடைய வசனத்தின் உதவி நமக்கு வேண்டும் என்று சங். 119:9-ல் வாசிக்கிறோம்.

கலாத்தியர் 5:16 ல், **ஆவிக்கேற்றபடி நடந்து கொள்ளுங்கள். அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றா திருப்பீர்கள்** என்று வாசிக்கிறோம். நம் ஆத்துமாவை அபகரித்துக்கொள்ள மாம்சம் ஆவிக்கு விரோதமாகப் போட்டியிட்டுக் கொண்டிருக்கிறது. சரீர இச்சைகள் நம்மை ஒரு திசையில் இழுக்க, ஆவி நம்மை எதிர் திசையில் இழுக்கிறது. ஆனால், நாம் எதனோடு உடன்பட்டுப் போகிறோம் என்பதை நாம் தீர்மானிக்க வேண்டும். நாம் மாம்ச இச்சைகளுக்கேற்றபடி நடந்தால் ஆவிக்குரியவைகளை நிறைவேற்ற முடியாமல் போகும் நிலை ஏற்பட்டுவிடும்.

**மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள். ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள்** என்று ரோமர் 8:13- ல் வாசிக்கிறோம். நாம் அப்படிச் செய்தால் மாத்திரமே தேவனுடைய புத்திரராய் இருக்க முடியும் (ரோமர் 8:14).

தொடர்ந்து கலாத்தியர் 5:19-21 வரை உள்ள வசனப்பகுதியை நாம் கவனிப்போம். இங்கே மாம்சத்தின் கிரியைகளென பதினேழு காரியங்கள் பட்டியலிடப் பட்டிருக்கின்றன. ஒவ்வொருவருக்கும் வெவ்வேறான காரியங்களில் போராட்டங்கள் இருக்கக்கூடும். இந்த மாம்ச கிரியைகளோடு நமக்கு இருக்கும் போராட்டத்தில் நாம் என்ன செய்கிறோம் என்பது மிக முக்கியமானது. ஏனென்றால், நம்முடைய நித்திய வாழ்க்கை அதை வைத்துத்தான் தீர்மானிக்கப்படுகிறது.

வசனம் 21-ல் இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்ஜியத்தைப் சுதந்தரிப்ப தில்லை என்று முன்னே நான் சொன்னது போல இப்பொழுதும் உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று வாசிக்கிறோம். இங்கே அப்போஸ்தலனாகிய பவுல் இரண்டு முறை நம்மை எச்சரிக்கிறார். அது இரண்டு உண்மைகளை நமக்குக் கற்றுத்தருகிறது. ஒன்று, எவ்வளவு சுலபமாக ஒருவராலே சரீர இச்சைகளில் சிக்குண்டு நித்தியத்தை இழக்க முடியும் என்பது. இரண்டு, எப்படிப்பட்ட எச்சரிப்போடு நாம் நம்மை காத்துக் கொள்ள வேண்டும் என்பது.

- ★ அப்படியானால் நாம் எப்படிப்பட்ட முடிவை எடுக்கிறோம்? ஆவியின்படி நடக்கத் தீர்மானிக்கிறோமா? சரீர ஆசைகளுக்கு அடிமைப்பட்டு வாழத் தீர்மானிக்கிறோமா? கவனமாக முடிவெடுக்க வேண்டும்!
- ★ சரீர இச்சைகளுக்கு அடிமைப்பட்டு அதை நிறைவேற்ற பிரியாசப்படுபவர் தேவனுடைய ராஜ்ஜியமாகிய கிறிஸ்துவின் ராஜ்ஜியத்திலே சுதந்திரமடைவதில்லை என்றும் இப்படிப்பட்டவர்கள் மேல் தேவ கோபாக்கினை வரும் என்றும் எபேசியர் 5:3-6 ல் வாசிக்க முடியும்.

இப்படிப்பட்ட தருணங்களில் நாம் ஒரு நல்ல முடிவை பயபக்தியுடன் எடுக்க தேவனுடைய வார்த்தைகளின் உதவியை நிச்சயம் நாட வேண்டும். அப்படியானால், இதற்காக வசனம் என்ன சொல்லுகிறது? கலா.5:24ல் **கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள் என்று** வாசிக்கின்றோம். ஆகையால், ஞானஸ்நானத்தின் மூலம் பாவத்துக்கு மரித்த நாம் இனி அதிலே பிழைக்கக்கூடாது [ரோமர் 6:2], நாம் தேவனுக்கென்று எப்பொழுதும் பிழைக்கிறவர்களாகவே இருக்க வேண்டும்.

பரலோக வாழ்வுக்குத் தடையாக இருக்கும். பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் தொடர்ந்து

ஒவ்வொரு நாளும் நாம் களைந்து போட வேண்டும். பாவங்களைக் களைவது ஞானஸ்நானத்தின் போது மட்டும் நடைபெற வேண்டிய ஒரு செயல் அல்ல. புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனை ஒவ்வொரு நாளும் மறவாமல் தரித்து கொண்டே இருக்க வேண்டும் (கொலோ.3:110). நாம் கிறிஸ்துவுக்குள் இருப்பதினாலே புதிய சிருஷ்டியாக இருக்கிறோம். எனவே, பழைய மனுஷனை ஒழிக்க வேண்டுவது அவசியம். சரீர இச்சை களையும் அதின் கிரியை களையும் வெறுத்து அதனிடமிருந்து விலகுவது ஒரு நல்ல கிறிஸ்தவ வாழ்க்கை வாழ அடிப்படைத் தேவையாக இருக்கிறது.

நாம் ஆவியினாலேயே பிழைத்திருக்கிறோம் என்றால் ஆவிக்கேற்றபடி நடக்கவும் வேண்டும். நாம் ஆவியினாலே பிழைத்து சரீர இச்சைகளை நிறைவேற்றி நடக்க முடியாது (கலாத்தியர் 5:25). கிறிஸ்துவை அறிந்த நாம் ஒவ்வொரு வரும் மாம்சத்திற்குக் கடனாளிகளல்ல. ரோமர் 8:12–ல் மாம்சத்தின்படி பிழைப்பதற்கு நாம் மாம்சத்துக்குக் கடனாளிகல்ல என்று வாசிக்கிறோம்.

ஆக, நாம் சரீர இச்சைகளுக்கும், அதின் கிரியை களுக்கும் விலகி நிற்க வேண்டும். கலா. 6:8 –ல் மாம்சத்திற் கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான், ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்திய ஜீவனை அறுப்பான் என்று வாசிக்கிறோம்.

தேவனுடைய வார்த்தைகள் ஒன்றை தெளிவாக அம்பலப் படுத்துகிறது. சரீர இச்சைகளும் அதின் கிரியைகளும் அழிவை மட்டும் தரும். மாறாக, ஆவிக்குரிய கிரியைகள் நித்திய ஜீவனைத் தரும். நான் ஏற்கனவே சொன்னது போல வாலிபர்களாலே அனுதினமும் எதிர் கொள்ளப்படும் ஒரு கேள்வி ஆவியின் காரியங்களுக்குள் நிலைத்திருப்பதா அல்லது சரீர இச்சைகளுக்கும் அதன் கிரியைகளுக்கும் அடிமைப்படுவதா? இப்படிப்பட்ட சூழல் இப்பொல்லாத உலகில் ஒவ்வொரு நாளும் நிச்சயம் வரும். ஏனென்றால், பிசாசானவன் கெர்சிக்கிற சிங்கம் போல எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித் திரிகிறான். அவனைக் கண்டு நாம் பயப்படத்தேவை யில்லை. நாம் செய்ய வேண்டியது தெளிந்த புத்தியுள்ள வர்களாக எப்பொழுதும் இருந்து, விழித்திருக்க வேண்டும். நாம் தெளிந்த புத்தியோடு, கவனமாக விழித்திருந்தால் நாம் நிச்சயம் ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்து தேவனுக்காக வாழமுடியும். அப்படிச் செய்ய தேவன் நமக்கு ஆவியின் பெலனைத் தருவாராக! ஆமென்!! ★

திருவர் பகுதி

# தேவனுக்கு நன்றி சொல்லுகிறோமா?

Dr. **பிரெய்ஸி**

என் அன்பு பிள்ளைகளே! எப்படி இருக்கின்றீர்கள்? போன மாதம் நாம் வாசித்த பெற்றோருக்குக் கீழ்ப்படிதல் என்ற தலைப்பின்படி பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து நடக்கிறீர்கள் என நம்புகிறேன். இனி ஒவ்வொரு மாதமும் செய்முறை பயிற்சிகளான வினாடி வினா, வண்ணம் தீட்டுதல் போன்ற புது முயற்சிகளும் இடம் பெறும். நீங்கள் விடை எழுதி, கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்பினால் உங்கள் பெயர் நம் திருமறை ஆசானில் இடம் பெறுவதுடன், குலுக்கல் முறையில் தெரிந்தெடுக்கப்பட்ட 3 குழந்தைகளுக்கு சிறப்பு பரிசும் கொடுக்கப்படும். சரி, நாம் இம்மாத செய்திக்குப் போகலாமா?

நீங்கள் எல்லோரும் நல்ல பிள்ளைகள் என்று எனக்குத் தெரியும். ஆனால், எத்தனை பிள்ளைகள் உணவு உண்ணுமுன் தேவனுக்கு நன்றி தெரிவிக்கின்றீர்கள்? என்னடா! அக்கா இப்படி கேட்கிறார்கள் என்று நீங்கள் நினைப்பது எனக்குப் புரிகிறது. ஆயினும், சாப்பிடுமுன் தேவனுக்கு நன்றி சொல்வது ஒரு நல்ல பழக்கம்.

பிதாவின் ஒரே குமாரனாகிய இயேசு ஆண்டவர் எல்லா சந்தர்ப்பங்களிலும் தேவனுக்கு நன்றி செலுத்துவதை வேதத்தில் பல இடங்களில் வாசிக்கின்றோம். யோவான் 6:11-ல் **இயேசு அப்பத்தை எடுத்து ஸ்தோத்திரம்பண்ணி சீஷர்களிடத்தில் கொடுத்தார். சீஷர்கள் பந்தியிருந்தவர்களுக்குக் கொடுத்தார்கள்; அப்படியே மீன்களையும் அவர் எடுத்து ஸ்தோத்திரம் செய்து அவர்களுக்கு வேண்டிய மட்டும் கொடுத்தார்.** அதுபோல மத்தேயு 15:36-ல் **அந்த ஏழு அப்பங்களையும் மீன்களையும் எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி பிட்டுத் தம்முடைய சீஷர்களிடத்தில் கொடுத்தார். சீஷர்கள் ஜனங்களுக்குப் பரிமாறினார்கள்.**

இன்னும், கடைசிப் பந்தியான அந்த ராத்திரியில் (லூக்கா 22:19)-ல் இயேசு அப்பத்தையும், ரசத்தையும் எடுத்து ஸ்தோத்திரம் பண்ணி சீஷர்களுக்கு உண்ணவும், குடிக்கவும் கொடுத்தார்.

என் பிள்ளைகளே, நம் அருமை இயேசு உண்ணும் உணவுக்கு ஒவ்வொரு முறையும் தேவனுக்கு நன்றி செலுத்துவதைக் கவனித்தோம். எனவே, அவரைப் பின்பற்றும் நாமும் இயேசு நமக்குக் கொடுத்த அருமையான, சுவையான உணவுக்கு நன்றி செலுத்த வேண்டும். எத்தனையோ சிறு குழந்தைகள் சரியான உணவு, உடை,படிக்க பள்ளிக்குச்

செல்லமுடியாமல் இருக்கின்றனர். ஆனால், நாம் ஆசீர்வதிக்கப் பட்டதினால் உணவு, உடை, நல்ல பள்ளி போன்ற வசதியுடன் இருக்கிறோம். இவைகளை நமக்குக் கொடுக்க நமக்கு நல்ல பெற்றோர்கள் இருக்கிறார்கள். எனவே, பிள்ளைகளே, நாமும் ஆண்டவர் இயேசுவைப் போல ஒவ்வொரு முறை பள்ளியிலோ, வீட்டிலோ உணவு உண்ணும் போது ஜெபித்துப் பிறகு உணவு உண்ணுவதே சரியான முறையாகும். நீங்கள் பள்ளியிலும் வீட்டிலும் அவ்வாறு நன்றி செலுத்தி உணவு உண்ணும் பழக்கத்தைப் பார்க்கும் மற்ற பிள்ளைகளும் உணவு உண்ணும் முன் நன்றி செலுத்த பழகிக் கொள்வார்கள். அப்படித்தானே?

சரி பிள்ளைகளே! இப்பாடத்தைப் படித்ததன் மூலம் மகிழ்ச்சியாய் இருப்பீர்களென நம்புகிறேன். இனி ஒவ்வொரு முறை உணவு உண்ணும் போதும், தேவனுக்கு நன்றி செலுத்துவீர்கள் என நம்புகிறேன். அதை இன்றே தொடங்கி தொடர்ந்து செய்யுங்கள்.

**அன்புடன், பிரெய்ஸி அக்கா.**

என் பெற்றோர் நான் நான்கு வயதாயிருந்த போது, உணவு உண்ணும் முன் எனக்குக் கற்றுக் கொடுத்த இச்சிறு ஜெபம்.

**பிதாவே! இந்த உணவுக்கும், நீருக்கும் நன்றி.**
**இயேசுவின் நாமத்தில், ஆமென்!**

★

---

## சிறுவர்களுக்கான வேத வினா ( படிக்க யோவான். 1-4 அதி.)

★ இயேசு அக்கரைக்கு கடந்து சென்ற கடலின் பெயர் என்ன?

★ எதற்காக திரான ஜனங்கள் இயேசுவிற்கு பின் சென்றார்கள்?

★ இவர்கள் சாப்பிடத்தக்கதாக அப்பங்களை எங்கே கொள்ளலாம் என்று எந்த சீஷரிடத்தில் இயேசு கேட்டார்?

★ அப்பொழுது எந்த யூதருடைய பண்டிகை சமீப மாயிருந்தது?

★ இங்கே ஒரு பையன் இருக்கிறான். அவன் கையில் வாற்கோதுமை அப்பங்களும் மீன்களும் உண்டு என எந்த சீஷன் இயேசுவினிடத்தில் சொன்னான்?

★ சிறுவனிடம் எத்தனை வாற்கோதுமை அப்பங்கள் இருந்தன?

★ சிறுவனிடம் எத்தனை மீன்கள் இருந்தன?

★ பந்தியிருந்த புருஷர்கள் எத்தனைப் பேர்?

★ அப்பத்தை எடுத்து இயேசு என்ன செய்தார்?

★ எத்தனை கூடைகளில் சப்பிட்டு மீதியான அப்பங்களை நிரப்பினார்கள்?

# வேத வினா போட்டி

பதிலளிப்போர் கவனத்திற்கு...

கீழ்க்கண்ட கேள்விகளுக்கு வேதவசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் அடுத்த மாதம் 10 ம் தேதிக்குள் **திருமறை ஆசான்** முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் அலைபேசி எண்ணையும் தவறாமல் எழுதி அனுப்பவும். (இதற்கான விடை 'மார்ச்' மாத இதழில்)

## ரூத் புத்தகத்தில் தேடிக் கண்டுபிடியுங்கள்

1] தாவீது யாருடைய சந்ததி?

2] எலிமெலேக்கின் உறவின் முறையான் யார்?

3] நகோமியை விட்டுச் சென்றவள் யார்?

4] அறுக்கிறவர்களிடம் போவாஸ் சொன்னது என்ன?

5] பாதரட்சையைக் கழற்றிக் கொடுப்பது ஏன்? ?

6] ஜனங்கள் எங்ஙனம் போவாசை வாழ்த்தினார்கள்?

7] நகோமியின் பேரன் பெயர் என்ன?

8] ரூத்தும், நகோமியும் பெத்லெகேமுக்கு எப்போது வந்தார்கள்?

9] மோவாவுக்குச் சென்றவர்கள் யார் யார்?

10] போவாஸ் எங்கே உட்கார்ந்திருந்தான்?

## ஜனவரி மாத வினாக்களுக்கான விடைகள்

1. யெப்தா (11:1)
2. தோப்தேசத்திலே (11:3)
3. சிப்போர் (11:25)
4. பெத்லெகேம் (12:8)
5. நாற்பது வருஷம் (13:1)
6. மனோவா (13:2)
7. பாலசிங்கம் (14:5)
8. மீகா (17:1)
9. மிஸ்பா (20:1)
10. எலெயாசார் (20:28)

## சரியான பதில் எழுதியவர்களில் சிலர்

| | |
|---|---|
| S. மரியாள் | — மணலி, சென்னை |
| M. செல்வம் | — வெள்ளலூர் |
| C. சாவித்திரி | — திருப்பத்தூர் |
| G. பாக்ய சம்பூர்ணம் | — ஈரோடு |
| C. தர்மராஜ் | — நுள்ளிவிளை |
| S. ஜேசுராஜ் | — மணப்பாறை |
| J.ரெபேக்காள் | — மணப்பாறை |
| V.C. ரூபவல்யா | — நாசரேத் |
| N. ஜெபத்தாய் | — நாசரேத் |
| S. சாந்தகுமாரி | — நாசரேத் |
| K.S. மாணிக்கவாசகம் | — திருச்சி |
| N. இந்திராஜெபகனி | — நாசரேத் |
| J. ஜெயமணி ஜெயபாண்டியன் | — கடலூர் |
| G. சாமுவேல் மோகன்தாஸ் | — சென்னை |
| V.S.S. பால்ராஜ் . | — மதுரை |
| D. பவானிஅம்மாள் | — துத்திகுளம் |
| J. ஜான்சி | — ஆனைமலை |
| S. மரியஅந்தோணி | — திருச்சி |
| M. தங்கத்தாய் | — பொங்கலூர் |
| J. மெர்சி ஜெபராஜ் | — சென்னை |
| S. ஜெனிபர் | — கேத்தி பாலடா |
| செல்வமணி குணசேகரன் | — சென்னை |
| T. சாந்தி பாபு | — சென்னிமலை |
| S. ஜோதி சுரேஷ் | — திருச்சி |
| C.அருள்ராஜ் | — சென்னை |
| S. ஜெயராஜ் | — கோவை |
| R. ராஜேந்திரன் | — கோவை |
| M.P. சார்லஸ் முல்லர் | — சென்னை |
| D. அகஸ்டி | — மணலி, சென்னை |
| E. கங்கா | — மணலி, சென்னை |
| R. இளவரசி | — காங்கயம் |
| P. உமாதேவி | — காங்கயம் |
| K. ராமசாமி | — காங்கயம் |
| R. ராமசந்திரன் | — காங்கயம் |
| D. பாலாமணி | — காங்கயம் |
| S. செல்வி | — காங்கயம் |

# ஞானஸ்நானத்தின் அவசியம்

*Benny Martin*

பிரியமான திருமறை ஆசான் வாசகர்களே! உங்கள் யாவருக்கும் நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நல் நாமத்தில் வாழ்த்துதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் யாவரையும் இக்கட்டுரையின் வாயிலாக சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். நம் இரட்சிப்புக்கு ஞானஸ்நானம் முக்கியமானதா? மனிதனை இரட்சிப்பதற்கான தேவனுடைய ஒட்டுமொத்த திட்டத்தில் அது சேர்க்கப்பட்டிருக்கிறதா? தண்ணீர் ஞானஸ்நானத்தின் நோக்கம் என்ன? போன்ற கேள்விகளை மத உலகில் பலர் தொடுக்கின்றனர். இக்காரியம் பற்றி பல மனித அபிப்பிராயங்கள் பல தலைமுறைகளாக உலா வந்து கொண்டிருக்கின்றன. மார்க்கப்பிரிவினை கூட்டத்தினால் சிலர் ஞானஸ்நானம் தண்ணீருக்குள் முழ்கி எடுக்க வேண்டிய அவசியமில்லை, சும்மா தண்ணீரை ஊற்றினாலே போதும் என்று போதிக்கிறார்கள். இன்றும் சிலர் ஒருபடி கீழே இறங்கி தண்ணீரை ஒருவர் மீது ஊற்ற வேண்டிய அவசியம் கூட இல்லை தெளித்தாலே போதும் என்று போதிக்கிறார்கள். ஆனால், ஞானஸ்நானம் எதற்காக என்று வேதாகமம் வெளிப்படையாகச் சொல்கிறது. பொதுவான அடிப்படையில் நாம் பார்க்கும்போது ஞானஸ்நானம் என்பது சுவிசேஷத்தின் மூலமாக நம் பாவங்களிலிருந்து இரட்சிக்கப்படுவதற்கானது (மாற்கு 16:16). அது கிறிஸ்துவின் நாமத்தினால் பாவங்கள் கழுவப்படுவதைக் குறிக்கிறது. (அப்போஸ்தலர் 22:16) அது மறுப்பிறப்பை நாம் அனுபவிக்கும் வேளையாயிருக்கிறது. (யோவான் 3:3-5) அது தேவனுடைய சித்தத்திற்கு நாம் கீழ்ப்படியும் செயலாயிருக்கிறது (மத்தேயு 3:15-17). பிரியமானவர்களே! இன்னும் வேத வசனத்தின் வெளிச்சத்தில் ஞானஸ்நானம் எவ்வளவு முக்கியமானது என்பதை நாம் சற்று ஆராய்வோம்.

**I. ஞானஸ்நானம் இரட்சிப்புக்கானது**

தண்ணீர் ஞானஸ்நானம் என்கிற பாடத்தை நாம் பரிசீலிக்கும் போது மாற்கு 16:16ம் வசனம் முக்கிய மானதாகும். இந்த ஒரு வசனத்தை மையமாக வைத்தே பல இறையியல்புத்தகங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. இவ்வசனத்தை சரியாகப் புரிந்துகொள்வது ஞானஸ்நானம் என்னும் முக்கியமான பாடத்தைப் பற்றிய எல்லா தவறான

கருத்துக்களையும் நீக்க உதவும். பின்பு அவர் அவர்களை நோக்கி நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் என்றார் (மாற்கு 16:15,16). உண்மையாகவே அவ்வசனம் எதைப்பற்றி போதிக்கிறது? இந்த வாக்கியம் இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது. முதல் பகுதி இரட்சிப்பின் நிபந்தனைகளைப் பற்றிப் பேசுகிறது.இரண்டாவது பகுதி ஆக்கினைத் தீர்ப்புக்கான காரணங்கள் பற்றிப் பேசுகிறது. விசுவாசம் மட்டும் என்ற கொள்கையை ஆதரிப்பவர்கள் மாற்கு 16:16 யை தவறாகப் புரிந்து இதன் போதனையைத் தவிர்க்கிறார்கள் அல்லது அருவருக்கிறார்கள். இவ் வகையான மனப்பான்மை தவறானதும், தேவனடைய வார்த்தையை எதிர்க்கிறதுமாயிருக்கிறது. இவ்வசனத்தின் முதல் பகுதி யாரெல்லாம் இரட்சிக்கப்படுவார்கள் என்றும், இரண்டாம் பகுதி யாரெல்லாம் இழந்து போவர்கள் என்றும் சொல்கிறது. இவ்வசனத்தை நாம் மறுபடியும் பார்ப்போம். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக் குள்ளாகத் தீர்க்கப்படுவார்கள்.

ஞானஸ்நானம் பெறாதவன் ஆக்கினைக் குள்ளாகத்தீர்க்கப்படுவான் என்று கர்த்தர் சொல்லவே இல்லையே என்று பலர் அடிக்கடி வாக்குவாதம் செய்கிறார்கள். அப்படியானால் மாற்கு 16:16 வசனத்தின் இரண்டாம் பகுதி முதல் பகுதியை அவமாக்குகிறதா? நிச்சயமாக இல்லை! விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் என்று இயேசு சொன்னார். ஞானஸ்நானம் விசுவாசத்தைப் பின் தொடர்ந்து வருகிறது. விசுவாசத்திற்கு முன்பாக வருவதில்லை. இரட்சிப்பு ஞானஸ்நானத்தை அசாத்தியமான ஒன்றாக ஆக்கி தேவனுடைய கட்டளையைப் பரியாசப் பொருளாக மாற்றிவிடுகிறது (எபிரெயர் 11:16). மேலும் நம் கர்த்தர் விசுவாசத்தையும், ஞானஸ்நானத்தையும் இரட்சிப்புக்கு தேவையானவைகளாக ஆக்கிவிட்டார். இந்த உதாரணத்தை சற்று கவனியுங்கள்: ஒரு மனிதன் ஆகாரத்தை உட்கொண்டு அது ஜீரணமாகும் போது அவன் உயிர் வாழ்வான்; ஆனால் ஆகாரத்தை உட்கொள்ளாமலும் ஜீரணம் ஆகாமலும் இருக்கிறவன் மரிப்பான் என்று சொல்ல அவசியமிருக்கிறதா என்று சற்ற யோசித்துப் பாருங்கள். ஒருவர் புசிக்க மறுத்தால் ஜீரணமாவதற்கு ஒன்றுமில்லை என்பது தானே உட்பொருள்.

## II. ஞானஸ்நானம் பாவமன்னிப்புக்கானது

பேதுரு அவர்களை நோக்கி நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள் அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் என்று சொன்னார் [அப்போஸ்தலர் 2:38]. இவ்வசனப்பகுதி ஞானஸ்நானத்தின் நோக்கத்தைத் தெளிவாக வெளிப்படுத்துகிறது. ஆயினும், மார்க்கப் பிரிவினைக் கூட்டத்தினரால் பரப்பிவிடப்பட்டிருக்கும் தவறான கொள்கைகளினால் இவ்வசனப்பகுதியின் பொருள் திரிந்து, ஞானஸ்நானம் என்பது ஒரு கேலிப்பொருளாக பலரால் மாற்றப்பட்டிருக்கிறது.

தெளிவாகவே, மாற்கு 16:16 மற்றும் அப்போஸ்தலர் 2:38 ஆகிய வசனங்கள் மனிதனுடைய கடந்த கால பாவங்களிலிருந்து அவனை இரட்சிக்க ஞானஸ்நானம் அவசியமானது என்று தான் போதிக்கின்றன. ஞானஸ் நானத்திற்கு முன்பாக விசுவாசம் மனந்திரும்புதல், கிறிஸ்து இயேசுவினிடத்தில் ஒருவருக்கு இருக்கும் விசுவாசத்தை அறிக்கையிடுதல் போன்றவைகள் வர வேண்டும் [அப்போஸ்தலர் 8:36; ரோமர் 10:10 அப்போஸ்லாலர் 2:38]. இந்த ஞானஸ்நானம் இயேசு கிறிஸ்துவின் அதிகாரத்தினால் பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே பாவ மன்னிப்புக்கென்று கொடுக்கப்பட வேண்டும் [அப்போஸ்தலர் 2:38; மத்தேயு 28:18-20]. இதைத் தான் வானத்தின் கீழ் இருக்கிற சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கிக்க வேண்டு மென்று கர்த்தர் கட்டளையிட்டார். அதை நாம் ஒவ்வொரு வரும் விசுவாசித்து, மதிப்புக்கொடுத்து, கீழ்ப்படிந்து மற்றவர் களுக்கும் போதிக்க தேவன் தாமே நமக்கு உதவி செய்வாராக. ★

## கிறிஸ்து நிராகரிக்கப்படும் விதம்

- அவருடைய தெய்வீகத் தன்மையில் [லூக்கா 1:35]
- அவருடைய அதிகாரத்தை ஏற்றுக்கொள்வதில் [மத்தேயு 28:18]
- அவருடைய நாமத்திற்க்குக் கீழ்ப்படிவதில் [பிலிப்பியர். 2:9-11]
- அவருடைய சபையை அங்கீகரிப்பதில் [அப்போஸ்தலர் 20:28]
- அவரை உண்மையாய் ஆராதிப்பதில் [யோவான் 4:24]

# கிறிஸ்து என்னும் மார்க்கம்

Bro. ஜே. ஆபகூக் ஜேம்ஸ் ராஜகுமார்

(தொடர்ச்சி...)

## *II*. ஓய்வு நாளும், வாரத்தின் முதல் நாளும்

**தே**வன் இஸ்ரவேல் மக்களுக்குக் கட்டளையிட்ட ஓய்வுநாள் இன்றைய நாட்களின்படி அல்லது கிழமைகளின் படி எந்த நாள் என்பதைக் கண்டுபிடிக்க வேண்டியது அவசியம். ஏனென்றால், தேவன் சொல்லாத அல்லது வேதத்தில் சொல்லப்பட்டிராத ஒரு காரியத்தை அல்லது கருத்தை நாம் வேத உபதேசமாக கருதுவதும் அல்லது கடைபிடிப்பதும் சத்தியத்திற்கு விரோதமான அல்லது கர்த்தருக்கு விரோதமான காரியமாயிருக்கும். அறியாமை என்பது ஆத்துமாவுக்கு விரோதமான அபாயகரமான அல்லது மரணத்திற்கேதுவான சூழ்நிலைக்குட்பட்டதாயிருக்கிறது.

**என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சங்காரமாகிறார்கள்; நீ அறிவை வெறுத்தாய், ஆகையால் நீ என் ஆசாரியனாயிராதபடிக்கு நானும் உன்னை வெறுத்துவிடுவேன்; நீ உன் தேவனுடைய வேதத்தை மறந்தாய், ஆகையால் நானும் உன் பிள்ளைகளை மறந்து விடுவேன்,** என்று கர்த்தர் உரைக்கிறார், ஓசியா 4:6. எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார், 1தீமோத்தேயு 2:4.

இயேசு கிறிஸ்துவானவர் சிலுவையில் அறையப்பட்டதும், அவரது மரணமும், அடக்கமும் உயிர்த்தெழுதலும் வேதத்தின்படி ஓய்வுநாள் இன்றைக்கு எந்தக்கிழமை என்று நாம் கண்டுபிடிப்பதற்கு உதவி செய்கிறது. இயேசுவானவர் சிலுவையில் அறையப்பட்டது ஆயத்தநாள் என்று வேதம் கூறுகிறது.

அந்த நாள் பெரிய ஓய்வு நாளுக்கு ஆயத்த நாளாயிருந்தபடியினால், உடல்கள் அந்த ஓய்வு நாளிலே சிலுவைகளில் இராதபடிக்கு, யூதர்கள் பிலாத்துவினிடத்தில் போய், அவர்களுடைய காலெலும்புகளை முறிக்கும்படிக்கும், உடல்களை எடுத்துக்கொண்டு போகும்படிக்கும் உத்தரவு கேட்டுக் கொண்டார்கள், (யோவான் 19:31). யூதருடைய ஆயத்தநாளாயிருந்தபடியினாலும், அந்தக் கல்லறை சமீபமாயிருந்தபடியினாலும், அவ்விடத்தில் இயேசுவை வைத்தார்கள், (யோவான் 19:42).

மேற்கண்ட இரண்டு வசனங்களும் நமக்கு சில தகவல்களைத் தருகின்றன. அவை என்னவென்றால்:

- ✷ இயேசுவானவர் சிலுவையில் அறையப்பட்டது ஆயத்தநாள். இந்த ஆயத்த நாளை இன்றைக்கு நாம் வெள்ளிக்கிழமையாகக் கருதுகிறோம். ஏனென்றால், இயேசுவானவர் வெள்ளிக்கிழமையிலே சிலுவையில் அறையப்பட்டார்.
- ✷ இயேசுவானவர் சிலுவையில் அறையப்பட்டது ஆயத்த நாளாக அதாவது வெள்ளிக்கிழமையானால், அதற்கு மறுநாள் தான் ஓய்வு நாள். அதாவது சனிக்கிழமைதான் ஓய்வுநாள்.
- ✷ ஓய்வு நாளிலே வேலை செய்யாதபடி முன்தினமே ஓய்வு நாளைக்குரிய வேலைகளை ஆயத்தம் செய்துவைக்கிற படியால் அந்த நாளுக்கு ஆயத்தநாள் என்று பெயர் வந்தது. இந்த நாள் வாரத்தின் ஆறாம் நாள் ஆகும். ஆறாம் நாளிலோ, அவர்கள் நாள்தோறும் சேர்க்கிறதைப்பார்க்கிலும் இரண்டத்தனையாய்ச் சேர்த்து, அதை ஆயத்தம்பண்ணி வைக்கக்கடவர்கள், [யாத்திராகமம் 16:5,29].

ஓய்வு நாள் என்பது ஏழாம் நாள் அதாவது இன்றைய நாட்களின்படி சனிக்கிழமையாகும். யூதர்களுடைய வழக்கத்தின் படி அல்லது வேதத்தின் கூற்றுப்படி ஒரு முழு இரவும் ஒரு முழு பகலும் இணைந்தது தான் ஒருநாள் ஆகும். தேவன் வெளிச்சத்துக்குப் பகல் என்று பேரிட்டார், இருளுக்கு இரவு என்று பேரிட்டார்; சாயங்காலமும் விடியற்காலமுமாகி முதலாம் நாள் ஆயிற்று [ஆதியாகமம்1:5;ஆதி.1:8,13,19,23,31].

இயேசுவானவர் சிலுவையிலறையப்பட்ட ஆயத்த நாளான அன்று மாலை 6.00 மணிக்கு புதிய நாள், அதாவது மறுநாளான ஓய்வு நாள் துவங்குகிறபடியால், அதற்குள் அருகில் இருந்த கல்லறையில் இயேசுவின் சரீரத்தை வைத்தார்கள் [யோவான் 19:42].

இரவிலே பிரேதம் மரத்தில் தொங்கலாகாது என்கிற தேவனுடைய சட்டத்திற்காக, இரவு வருவதற்குள் இயேசுவின் உடலை அடக்கம் செய்தார்கள். கொலை செய்யப்பட ஒருவன் மேல், சாவுக்குப் பாத்திரமான பாவம் உண்டாயிருக்க, அவனைக் கொலைசெய்யும்படி மரத்திலே தூக்கிப்போடுவாயானால், இரவிலே அவன் பிரேதம் மரத்திலே தொங்கலாகாது; அந்நாளிலே தானே அதை அடக்கம் பண்ணவேண்டும்; தூக்கில்போடப்பட்டவன் தேவனால் சபிக்கப்பட்டவன்; ஆகையால் உன் தேவனாகிய கர்த்தர் உனக்குச் சுதந்தரமாகக் கொடுக்கும் உன் தேசத்தைத் தீட்டுப்படுத்தாயாக [உபாகமம் 21:22,23].

இயேசுவானவர் சிலுவையில் அறையப்பட்டு அடக்கம்பண்ணப்பட்டு (இது வெள்ளிக்கிழமையில் நடந்தது), மறுநாள், ஓய்வு நாளில் (அதாவது சனிக்கிழமையிலே) நடந்தது என்ன? இயேசுவை சிலுவையில் அறைந்த மறுநாளில் பிரதான ஆசாரியரும் பரிசேயரும் இயேசுவின் கல்லறையை பத்திரப்படுத்தும்படி பிலாத்துவினிடத்தில் கேட்டுக்கொண்டார்கள். ஆயத்த நாளுக்குப் பின்னான மறு நாளிலே பிரதான ஆசாரியாரும் பரிசேயரும் பிலாத்து வினிடத்தில் கூடிவந்து, ஆண்டவனே, அந்த எத்தன் உயிரோடிருக்கும்போது, மூன்று நாளைக்குப்பின் எழுந்திருப்பேன் என்று சொன்னது. எங்களுக்கு ஞாபகமாயிருக்கிறது. ஆகையால் அவனுடைய சீஷர்கள் இராத்திரியிலே வந்து, அவனைக் களவாய்க் கொண்டுபோய், மரித்தோரிலிருந்து எழுந்தானென்று ஜனங்களுக்குச் சொல்லாதபடிக்கும், முந்தின எத்தைப்பார்க்கிலும் பிந்தின எத்து கொடிதாகாதபடிக்கும், நீர் மூன்றுநாள் வரைக்கும் கல்லறையைப் பத்திரப்படுத்தும்படி கட்டளையிட வேண்டும் என்றார்கள். அதற்குப் பிலாத்து: உங்களுக்குக் காவல் சேவகர் உண்டே; போய், உங்களால் கூடிய மட்டும் பத்திரப்படுத்திக் கொள்ளுங்கள் என்றான். அவர்கள் போய்க் கல்லுக்கு முத்திரைப்போட்டுக் காவல் வைத்து, கல்லறையைப் பத்திரப்படுத்தினார்கள்(மத்தேயு 27:62-66).

இந்த மறுநாள் என்பது இன்றைய கிழமைகளின்படி சனிக்கிழமையாயிருக்கிறது. இயேசுவின் சரீரம் கல்லறையில் இருந்தது. இந்த மறுநாளான ஓய்வு நாளிலே இயேசுவானவர் என்ன செய்தார்? அவர் வாழ்ந்த சரீரம் கல்லறையில் வைக்கப்பட்டது. ஆனால் அவர் (உள்ளான அல்லது மெய்யான மனிதன்) என்ன செய்தார்?

தொடரும்...

## நாளும் நடப்பும்

- காஷ்மீரில் தீவிரவாதிகள் பயங்கர தாக்குதல் ராணுவ வீரர்கள் 46 பேர் பலி
- பாகிஸ்தான் மிக ஆதாரமான நாடு என்னும் அந்தஸ்தை இழந்து விட்டது இந்தியா திட்டவட்ட அறிவிப்பு
- அனைத்து அவசர உதவிக்கும் புதிய எண் 112.
- GSAT - 31 விண்ணில் வெற்றிகரமாகப் பாய்ந்தது.
- 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகள் மார்ச்1-ல் துவக்கம் - பள்ளி கல்வித்துறை
- நியூசிலாந்துக்கு எதிரான ஒரு நாள் தொடரை இந்தியா கைப்பற்றி சாதனை

# இயேசுவை தொழுது கொள்ளலாமா?

*Bro.* ஆறுமுகம்

(தொடர்ச்சி...)

அப்படியானால் இந்தக் கர்த்தருடைய தூதனானவர் பணிவிடை ஆவியாகிய தூதனைக் குறிக்கிறதா? பிதாவாகிய தேவனைக் குறிக்கிறதா? இயேசு கிறிஸ்துவை குறிக்கிறதா? பிதாவாகிய தேவனையல்ல (யோவான்.1:18). பணிவிடை ஆவியாகிய தூதனுமல்ல (எபி.1:14) ஏனெனில் ஆபிரகாம் ஒரு தூதனுக்காகவா பலியிடச் சென்றார்? இல்லை. எனவே குமாரனாகிய இயேசுவையே குறிக்கிறது என்ற முடிவுக்கே வருகிறோம். பழைய ஏற்பாட்டில் மேலும் பல சம்பவங்களைக் காணலாம்.

**3.நியாயதிபதிகள் 13:16-21**

குழந்தை பாக்கியமில்லாதிருந்த தம்பதி மனோவாவுக்கும், அவனுடைய மனைவிக்கும் தரிசனமான தேவனுடைய தூதனானவர், சிம்சோனின் பிறப்பை முன்னறிவித்தார். அவருடைய பெயர் என்னவென்று அவர்கள் கேட்டபோது, தமது பெயர் **அதிசயம்** என்று சொன்னார். ஏசாயா 9:6-ல், கிறிஸ்துவின் பிறப்பைக் குறித்து முன்னுரைத்த ஏசாயா நமக்கு ஒரு பாலகன் பிறந்தார், நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார். கர்த்தத்துவம் அவர் தோளின் மேல் இருக்கும்; அவர் நாமம் **அதிசயமானவர்** (**strongs** 6392) ஆலோசனைக் கர்த்தர், வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப் பிரபு என்னப்படும், என்று உரைத்தார்.

அவருக்குக் கொடுக்கப்பட்ட ஐந்து நாமங்களில் ஒன்று **அதிசயமானவர்**. இதே பதிலைத்தான் கர்த்தருடைய தூதனானவர் தமது நாமம் **அதிசயம்** என்று சொன்னார் (நியா.13:18). மனோவாவும் அவன் மனைவியும் அவருக்கு போஜனம் வைத்தபோது அந்த அதிசயம் விளங்கினது. அவர் பலிபீடத்திலிருந்து எழும்பிய அக்கினி ஜீவாலையிலே மேலே ஏறிப்போனார், இந்தக் கர்த்தருடைய தூதானவர் யார்? (வச.19,20) (Strongs Exhaustive concordance hebrew - n 6381). இங்கு ஏசாயா 9:6 ல் **அதிசயம்** என்று சொல்லப்பட்ட வார்த்தை 'Pehleh பீலே' (எபிரேய சொல் அகராதி எண்.6382. நியாயாதிபதிகள் 18-20 பேசுகிற **அதிசயம்**- எபிரேய வார்த்தை Paw-law- ப-லா (எண்.6381) இரண்டும் **அதிசயம், ஆச்சரியம்** என்னும் பொருளையே கொடுக்கிறது.

தேவதூதனானவர் செய்தவைகளைப் பார்த்துக் கொண்டிருந்த மனோவாவும், அவன் மனைவியும் **முகங்குப்புற தரையிலே விழுந்தார்கள்** என்றும் வச.22ல் **நாம் தேவனைக் கண்டோம்** என்று அறிக்கையிட்டார்கள் என்றும் வாசிக்கிறோம். மேற்குறித்த வசனப் பகுதியில் அடையாளப் படுத்தபடும் கர்த்தருடைய தூதானவர் யார்? (நியா. 13:3, 13,16-20).வசனம் 19ல் போஜனப்பலியும் வெள்ளாட்டுக் குட்டியும் யாருக்குச் செலுத்தப்பட்டது? மேற்குறித்த வசனம் எந்தக் கர்த்தருக்குச் செலுத்தினார்கள்? தேவனாகிய கர்த்தருக்கா? குமாரனாகிய கர்த்தருக்கா? எந்த தேவனை அவர்கள் கண்டதாகச் சொன்னார்கள்? (வச.22; யாத்.33:20).

மேற்குறித்த அனைத்து கேள்விகளுக்கும் ஒரே பதில் **கிறிஸ்துதான்**, அவர்கள் தரையிலே முகங்குப்புற விழுந்தார்கள், (மேலும் காண்க. ஆதி.31-11-13; எண்.22:22-35).

*II* புதிய ஏற்பாட்டில்....

1. **மத்தேயு 2:11** கிழக்கிலிருந்து சாஸ்திரிகள் எருசலேமுக்கு வந்து, அவர்கள் அந்த வீட்டுக்குள் பிரவேசித்து, பிள்ளையையும் அதின் தாயையும் கண்டு, சாஷ்டாங்கமாய் விழுந்து அதைப் (பிள்ளையைப்) பணிந்து கொண்டார்கள்.

*a.* இந்த சாஸ்திரிகள் தாயாகிய மரியாளையும் பிள்ளையாகிய இயேசுவையும் கண்டார்கள். ஆனால் இயேசுவை மட்டும் பணிந்து கொண்டார்கள்.

*b.* பிள்ளைக்கு காணிக்கையும் செலுத்தினார்கள். இந்தப் பணிந்து கொள்ளுதல் எதைக் குறிக்கிறது?

2. **மத்தேயு 14:33** அப்பொழுது படவிலிருந்தவர்கள் வந்து மெய்யாகவே நீர் தேவனுடைய குமாரன் என்று சொல்லி, அவரைப் பணிந்து கொண்டார்கள்.

அது ஒரு நான்காம் ஜாமம் (அதிகாலை) ஒரு உருவத்தைக் கண்ட சீஷர்கள், அந்த உருவம் ஏதே ஆவேசம் (ஆவி) என்று எண்ணி, பயந்து அலறினார்கள். இயேசு அவர்களைத் திடப்படுத்தி, நான்தான், பயப்படாதிருங்கள் என்று சொன்னார். பேதுருவும் சற்று தண்ணீர்மேல் நடந்தார். ஆனால், காற்று பலமாய் வீசினபோது பேதுரு தண்ணீரில் மூழ்கினார். அவரைத் தூக்கிவிட்ட இயேசு கடலையும், காற்றையும் அமைதிப்படுத்தி, படகில் அமர்ந்தபோது, படவிலிருந்த சீஷர்கள் அவரைப் பணிந்து கொண்டார்கள் இந்தப் பணிந்துகொண்ட காட்சி எதைக் குறிக்கிறது? தொழுகையா, வேறெதுவுமா?

### 3. அப்போஸ்தலர்களும் இயேசுவைப் பணிந்தார்கள் [லூக்கா 24:50-52]

பின்பு அவர் பெத்தானியா வரைக்கும் அவர்களை அழைத்துக் கொண்டு போய், தம்முடைய கைகளை உயர்த்தி அவர்களை ஆசீர்வதித்தார். அவர்களை ஆசீர்வதிக்கையில், அவர்களை விட்டுப் பிரிந்து, பரலோகத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார். அவர்கள் அவரைப் பணிந்து கொண்டு, மிகுந்த சந்தோஷத்தோடே எருசலேமுக்குத் திரும்பி வந்தார்கள். அப்போஸ்தலர்கள் யாரைப் பணிந்துகொண்டு சந்தோஷத்தோடே பேனார்கள்? இயேசுவை.

### 4.யேவான் 9:35-38

பல பிரச்சனைகளையும் குழப்பங்களையும் உண்டாக்கிக் கொண்டிருந்த யூதமத கூட்டத்தார்கள் மத்தியில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கெல்லாம் சொஸ்தமாக்கப்பட்ட பிறவிக் குருடன் பதிலளித்துக் கொண்டிருந்ததைக் கவனித்த ஆண்டவர் இயேசு அவனிடத்தில் ஒரு கேள்வியைக் கேட்டார்: **நீ தேவனுடைய குமாரனிடத்தில் விசுவாசமாயிருக் கிறாயா? என்றார். அதற்கு அவன்: ஆண்டவரே, அவரிடத்தில் விசு வாசமாயிருக்கும்படிக்கு அவர் யார் என்றார்?** [யோவான் 9:35,36]. இயேசு அவனை நோக்கி: **நீ அவரைக் கண்டிருக்கிறாய்; உன்னிடத்தில் பேசுகிறவர் அவர்தான் என்றார்** [வச.37]. உடனே அவன் அவரை விசுவாசிக்கிறேன் என்று சொல்லி, அவரைப் பணிந்து கொண்டான் [வச.38] இந்தப் பிறவிக் குருடன் பணிந்து கொண்ட செயல் தொழுகையா? வேறே செயலா? மேற்குறித்த நான்கு நிகழ்ச்சிகளிலும் இயேசுவைப் பணிந்து கொண்டதாக சொல்லப்பட்டுள்ளது. இது தொழுகையில் என்று வாதிடுவோர் இருக்கிறார்கள்.

தமிழ் திருமறை அதன் மூலபாஷைகளிலிருந்து நேரடியாக மொழி பெயர்க்கப்பட்டது. கிறிஸ்தவப் பின்னணியை அறியாத ஒரு நபரால் மொழியாக்கம் செய்யப் பட்டதாகச் சொல்லப்படுகிறது. எனவே, அவர் எந்த உபதேசக் கோட்பாட்டையும் திருமறையில் சுயமாய் திணிக்க அவருக்கு வாய்ப்பில்லாதிருந்ததையும் நாம் அறிந்து கொள்கிறோம். உபதேசக் கோட்பாட்டிற்கு அப்பாற்பட்ட சில வார்த்தைகள் சில வேளைகளில் [சில இடங்களில்] தவறுதலாகப் போடப்பட்டுள்ளன.

தொடரும்...

# மரணத்துக்கேதுவான பாவம்

*Bro.* பாண்டியன்

**ஆ**ண்டவர் இயேசுவின் நாமத்தில் உங்களுக்கு சமாதானம் உண்டாவதாக! பாவத்தைப் பற்றி அக்கறை அல்லது விழிப்புணர்வு இல்லாத உலகில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். கிறிஸ்துவ மார்க்கமே பாவத்தின் சம்பளம் மரணம் என்று அற்புதமான விளக்கமளிக்கிறது. பாவத்தை தேவன் அருவருக்கிறார். ஆனால், மாம்சத்தில் இருக்கும் மனிதனை, தேவசாயலாக இருக்கும் மனிதனை பாவம் ஆண்டு கொள்கிறது. தேவசாயலாக படைக்கப்பட்ட மனிதன், கூட்டமாகப் பெருகியபோது அக்கிரமமும் பெருகிறது. மனிதனை உண்டாக்கியதற்காக தேவன் மனஸ்தாபப்பட்டார். இதைப் புரிந்துகொள்ளாத மனிதர் அநித்தியமான பாவசந்தோஷத்தில் விருப்பமுற்றுத் திரிகிறதைக் காண்கிறோம்(எபி.11:25) இக்கட்டுரையில் *I*யோவான் 5:16-ல் காணப்படும் மரணத்துக்கேதுவான பாவத்தைக் குறித்து சற்று பார்ப்போம்.

கிறிஸ்து வருமுன்பாக தேவனை வணங்கிய இஸ்ரவேலருக்கு மோசே மூலமாக நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டது. அதில் மரணத்துக்கேதுவான பாவங்களாக அநேகம் சொல்லப்பட்டுள்ளது.ரோமர் 15:4-ன் படி முன்பு, எழுதப்பட்டவைகள் நமக்குப் போதனையாக உள்ளது. உதாரணமாக, விடுதலைப் பண்டிகையாகிய பஸ்காப் பண்டிகையில் புளிப்பிடப்பட்டதைப் புசித்தால் அறுப்புண்டு போவான் (யாத். 12:19). நாம் அறிந்தபடி, நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து பலியிடப்பட்டுள்ளதால் துப்புரவு, உண்மையோடே அதை ஆசரிக்கவும், விபசாரக்காரரோடே கலவாதிருக்கவும் அப். உபதேசம் போதிக்கிறது (*I* கொரி. 5:7-11). அதின்படி நாம் சகோதரரென்னப்பட்ட ஒருவன் விபச்சாரம், பொருளாசை, விக்கிரக ஆராதனக்காரனாக இருந்தால் அவர்களை விட்டு விலகியிருக்க வேண்டும். இந்த லிஸ்டில் குடிகாரன், கொள்ளைக்காரனும் சொல்லப்பட்டுள்ளது.

அப்படிப்பட்டவர்களோடே இருந்த தொடர்பைத் தூண்டித்து, பிறகு அநுசரிக்கும் அப்பம் பிட்குதலே தேவ சமூகத்தில் அங்கீகரிக்கப்படும். இதை சுருக்கமாக இயேசு வானவர் இதில் புசியாமலும், பானம் பண்ணாமலும் இருந்தால் ஜீவனில்லை என்றார் ( யோவான் 6:53).

மேலும், சாட்சி கூடாரத்தை நெருங்கும் அந்நியர் கொலை செய்யப்பட வேண்டும் என்று வாசிக்கிறோம் (எண். 18:7). இது இரட்சிப்படைவதின் முக்கியத்துவத்தை விளக்குகிறது. நாம் சுவிசேஷத்தைக் கேட்டு விசுவாசித்து ஞானஸ்நானம் பெறுவதின் அவசியத்தை இது உணர்த்துகிறது. இன்றைய நாமகரணக் கூட்டங்களில் ஞானஸ்நானம் மற்றும் வாரந்தோறும் அப்பம் பிட்குதல் போன்ற அடிப்படை உபதேசம் கூட இல்லாமலிருக்கிறார்கள். இதெல்லாம் அஸ்திபாரம் என்று எபி. 6:1-3 ல் காண்கிறோம். என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வாரான் என்று ஆண்டவர் இயேசு தெளிவாகச் சொல்லியிருந்தும் சிலர் பிதாவை மட்டுமே மதிப்பதாக நடிக்கும் சாட்சிக்காரர்கள் ஆகவும், பலர் இயேசு ஆண்டவரை அறியாதவர்களாகவும் உள்ளனர். யோவான் 17:3 ன் படி பிதாவையும், அவர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன். இல்லையென்றால், ஜீவனில்லை மரணமே!

மோசேயின் பிரமாணத்தில் கைதவறி கொலை செய்தவர்கள் தப்பும்படி தேவன் அடைக்கலப் பட்டணத்தை ஏற்படுத்தச் சொன்னார். ஒருவன் அதிலிருந்து வெளி யேறினால் பாதுகாப்பு இல்லை ( எண். 35:27) நாமெல்லாரும் பாவஞ்செய்து தேவ மகிமையற்றவர்களாகி, கிறிஸ்துவின் கிருபையால் இரட்சிப்படைந்து அவருடைய சபையாகிய அடைக்கலப் பட்டணத்துக்குள்ளே சேர்க்கப்பட்டுள்ளோம். அதேபோல், கர்த்தரின் சந்நிதியில் **மிஸ்பா** என்ற இடத்தில் கூடி வராதவன் கொலை செய்யப்படக்கடவன் என்ற ஆணை இஸ்ரவேல் சபையாரிடம் இருந்தது (நியா.21:56) வாரத்தின் முதல் நாள் சபை கூடுதல் நமக்கு கட்டளையிடப்பட்டுள்ளது. கர்த்தருடைய சந்நிதியில் அந்த நேரத்தில் நாம் காணப்படாமற் போனால் நம் ஆத்துமாவில் மரித்துப்போகும் ஆபத்துக் குள்ளாவோம் என்பதை நாம் சிந்தித்துப்பார்த்து புத்தி சொல்ல வேண்டும். மீறி கூடிவராதவர்களுக்கு

வேறொரு பலி இல்லை, நியாயத்தீர்ப்பும், ஆக்கினையுமே உண்டு[எபி 10:25-27]. ஆக, சபை கூடி வருதலை விடுதல் மரணத்துக் கேதுவான பாவமே என்பதை மனதில் வையுங்கள்.

விசுவாசத்தினால் வராத யாவும் பாவமே என்று பார்க்கிறோம். ஆகவே, வேதத்தில் சொல்லப்பட்ட எச்சரிப்புகளைக் கவனித்து அந்நிய தெய்வங்களை நாடாமல். ஜோசியம் போன்ற அஞ்சனம் பார்க்காமல் தேவனை நம்பியிருக்க வேண்டும் [I நாளா. 10:13]. நியாயப்பிரமாணத்தை மீறுவது பாவம் அல்லவா? நியாயப் பிரமாணத்தில் பிரதானமாக இயேசு குறிப்பிட்டது, உன்னை நேசிப்பது போல பிறனையும் நேசி என்பது பொதுவாக, நாம் பிறரைக் குற்றப்படுத்தி, குறைகளைப் பெரிதாக்குகிறோம். அப்படிச் செய்யாமல் நாம் சகோதரரிடத்தில் அன்பு கூருகிறபடியால் மரணத்தைவிட்டு நீங்கி ஜீவனுக்குட் பட்டிருக்கிறோம் [Iயோவான்3:14]. அநீதியெல்லாம் பாவம் என்கிறார் மூப்பராகிய யோவான். அதை யாக்கோபு குறிப்பிடும் போது நாவு அநீதி நிறைந்த உலகம் என்கிறார். இன்றைய நாட்களில் வாலிபப் பிள்ளைகள் செல்போனில் நேரம் போவது தெரியாமல், மணிக்கணக்காக பேசி பிரச்சினைகளுக்கு உள்ளாகிறார்கள். சொற்களின் மிகுதியால்[நீதி.10:19] பாவமில்லாமற் போகாது என்று பார்க்கிறோம். ஒருவேளை இது மரணத்துக்கேதுவாக இல்லாதாகத் தோன்றலாம். ஆனால், ஜாக்கிரதையாய் இருப்பது நலம். மேலும் நன்மை செய்ய அறிந்தும் செய்யாமற்போனால் அது பாவம் என்கிறார் யாக்கோபு. நாம் முதலாவது நம் ஆத்துமாவுக்காக சபை கூடி வந்து நன்மை செய்துகொள்ள வேண்டும். அதில் இருந்து தான் பிறருக்கு உதவும் அறிவைப் பெற முடியும்.

நம்மை நாமே சோதித்தறிந்தால் நாம் நியாயந் தீர்க்கப்படோம். அதற்கு நாம் உன்னதமானவரின் மறைவாகிய சபை கூடுதலில் தரித்து இருக்க வேண்டும். வெளிப்புற சுத்தத்தை விட, உட்புற சுத்தத்தில் முக்கியத்துவம் கொடுத்து தேவனுக்குப் பிரியமாக நடக்கவே தேவன் நம்மைத் தெரிந்து கொண்டார். நாம் உலகத்துக்கு வெளிச்சமாகவும் பூமிக்கு உப்பாகவும் இருக்க தேவன் நமக்குக் கிருபை செய்வாராக! ஆமென். ★